# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் வரலாறு

1799 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டு தற்போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமென அழைக்கப்படும் இத் திணைக்களத்திற்கு இந்த ஆண்டில் (2016), 217 வருடங்கள் பூர்த்தியாகின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமானது இலங்கையில் அரச துறையின் கணக்காய்வுக்கு பொறுப்பாக கடமையாற்றுகின்ற அதியுயர் கணக்காய்வு நிறுவனமாகும். கணக்காய்வு என்பதற்கு இலத்தின் மொழியில் "Audirc" என கூறுவார்கள். அதன் சிங்கள கருத்து "எஸெனவா" (கேட்கின்றது) என்பதாகும். அக்காலத்தில் பணம் மற்றும் பண்டமாற்று விடயங்களிற்கும் அவைகளின் கணக்கீட்டு வைப்புகளுக்கும் பொறுப்பாகவிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து வாய்மொழி மூல விசாரணைகள் மேற்கொண்டு அதன் மீது பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்களின் சரியான தன்மை அல்லது பொறுப்புக்கூறல் தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த பொறுப்புக்கூறல் எண்ணக்கரு இலங்கைக்கு புதியதொன்றோ அல்லது பழக்கமற்றதொன்றோ அல்ல. பல நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட இலங்கை மக்களுக்கு பொறுப்புக்கூறல், கணக்காய்வு குறித்து காணப்பட்ட அறிவு மற்றும் தெளிவை உறுதிப்படுத்துகின்ற வரலாற்றுமிக்க பல சான்றுகள் நிலவின. அவ்வாறு இலங்கையில் கணக்காய்வு நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் தொடர்பான விடயங்களை ஆராய்தல் கீழே தரப்பட்டுள்ள பிரதான இரண்டு தலைப்புக்களின் கீழ் மேற்கொள்ளப்படுவது மிகவும் பொருத்தமானதாகும்.

- (அ) புரதான இலங்கையின் கணக்காய்வு
- (ஆ) தற்கால இலங்கையின் கணக்காய்வு

### புராதன இலங்கையின் கணக்காய்வு

2500 வருட காலத்தினுள் கட்டியெழுப்பப்பட்ட மாபெரும் வரலாற்றைக் கொண்ட இலங்கையில் மன்னர்களால் ஆட்சி புரியப்பட்ட யுகத்தில் வருமானச் சேகரிப்பு, பயன்படுத்துதல், கணக்குவைத்தல் மற்றும் அவைகளை பரிசோதித்தல் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் முறையான நிதிக் கட்டுப்பாட்டு செயற்பாடொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கல் வாங்கல்களை பரிசோதித்தல், கணக்குகளைப் பரிசோதித்தல் அல்லது கணக்காய்வு என

அழைக்கப்படுகின்ற தற்கால பரிசோதனை முறை அக்காலத்திலும் காணப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள சான்றுகள் மூலம் அது உறுதியாகின்றது.

அனுராதபுரம் யுகத்தில் இந்த நாட்டை ஆட்சிசெய்த மன்னர்களிடையே இறுதியான சிரேஷ்ட ஆட்சியாளரென கருதப்படுபவர் iv ஆவது மிஹிந்து மன்னராகும். கி.பி 10 ஆம் நூற்றாண்டில் (கி.பி 1015 – 1031) அவரினால் செதுக்கப்பட்ட மிஹிந்தலா கல்வெட்டுக்களில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(i) ஆசிரமத்தின் ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளை செய்தல்
(ii) கணக்குகள் வைக்கப்படுதல் வேண்டுமென்பது
(iii) வருமானச் செலவின பதிவேடுகள் பேணப்படுதல்
(iv) மாதாந்தம் வருடாந்த கணக்குகளைத் தயாரித்தல்
(v) கணக்கு அறிக்கைகளின் பாதுகாப்பு
(vi) கணக்கு அறிக்கைகளை பிரதான தேரரின் முன் வெளியிடுதல்
(vii) புலப்படும் குறைபாடுகளிற்கமைய தண்டனைகளை வழங்குதல்

அந்தக் கல்வெட்டின் 54 – 58 வரையிலான வரிகள் அதுபற்றி சான்றுறுதிப்படுத்துகின்றன.

54 – கம்தென் செமகின் பசக் வனசெய்ன் ஆகல துவான் பஸ்பொத்ஹி லியவியே யுது மஹபா வடட் இஸா.

55 - லபனுவனட் இஸா கம்னவாமட் இஸா தவஸ்பதா வியயுதுவாக் பஸ்பொத்ஹி லியவா கம்தென் சே

56 - மெக்கின் அத்வத்து கரய் சன் ஒதமனவுன் சனித் படவய் முன்துகரடுயெஹி தபா மஸ்பதா மே

57 - அத்வத்து பலா எக் அத்வத்து கொட் ஹவுருதுயெஹி தொலொஸ் அத்வத்துயென் ஹவுருது அவசன்ஹி லேகம்

58 - கராய் சக்மென்தே ஜன்வா நிமெவியெ யுது மெ சிரித் இகுத் கஅமியன் கெதட் ஹெதே மெஹெய்ன் ஹெரியே யுது

“ஆசிரமத்தை பராமரிப்பதற்காகவும் வரி விதிக்கப்படுவர்களுக்காகவும், மறுசீராமைப்புக்காகவும் நாளாந்தம் செலவானவற்றை பதிவுசெய்து செலவுகளுக்காக உத்தியோகத்தர்களின் இணக்கப்பாட்டுடன் வரவு செலவுத் திட்டமொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

பிழையான ஆவணங்கள் புத்தகங்களில் பதிவழிக்கப்படுதல் வேண்டும். வரவு செலவுத் திட்டம் முத்திரையிடப்பட்ட பேழை ஒன்றினுள் வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு வைக்கப்பட்ட பதிவேடுகள் மாதாந்தம் பகிரங்கப்படுத்தப்பட்டு மீண்டும் ஒரு வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இவ்வாறு பன்னிரெண்டு மாதங்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் ஆண்டின் இறுதியில் ஆவணப்படுத்தப்பட்டு மகா சங்கதேரர் முன்னிலையில் பிரதலிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இந்த சட்டங்களை மீறுபவர்களிடமிருந்து தண்டப் பணம் அறவிடப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.”

(கல்வெட்டு ஆவணக் கோவையின் 1 ஆவது தொகுதி, தொன் மர்தினுத சில்வா விக்கிரமசிங்ஹ தொகுப்பு 1904 – 1912, தொல்பொருளியல் திணைக்களம்)

தற்காலத்தில் கணக்காய்வாளர்கள் கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்கையில் பின்பற்றுகின்ற அவதானிப்புக்கள் என அறிமுகப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகள் புராதன காலத்திலும் காணப்பட்டமைக்கான சான்றுகள் மிஹிந்தலா கல்வெட்டுக்களின் 25 – 30 வரையிலான வரிகளின் மூலம் வழங்கப்படுகின்றன.

25 - ஹொக் மெஹெயே நோ திபியெ யுது ஹெரியேயுது கெமியன் லேகம் கராண வுதெயக் கெனனே ஹெரியயுது முந்துகர

26 - டு கம்தென் கெமியக் ஹசின் ஹஸ்கொட் தாகே கெமியன் பசகின் தாகெய்ஹி திபியே யுது மே வெஹர்கி யுத்

27 - கெமியன் கெரென் வெஹெரட் கெமின் அதோப கிய கெனகுன் முத் தனே சிடி கெமியன் கெரென் வட் ஒனா தெ

28 - நே இஸா சால் கன்னா தெனே இஸா பெரேவரு ஹம்பு பன் சாகன தெனே இஸா துன் ஜனகுகெரன் நொ உனுவெ ப

29 - செகே கிடியே யுது எத்வேகர் தாகே பிலிபந்த கவரிவதகுத் பிருள் நொதியே யுது கெமியன் விக்கிணிய

30 - நோ கத்தே யுது மெஹேயே பத் மினிசுன் கெமியன் துமனட் மெஹே நோ கத்தே யுது அநோப மெஹெயட் நொதியே யுது

‘‘முத்திரையிடப்பட்ட பேழை கம்தென் கெமியனால் தாதுகெயவில் வைக்கப்பட வேண்டும். இந்த விஹாரையில் வேலையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுள் விஹாரைக்குள் சேவையாற்றுகின்றவர் தவிர்ந்த, வெளியே சேவையாற்றுகின்ற சம்பளம் பெறுவோர் இடத்துக்கும், அரிசி பெறுபவர், கஞ்சி மற்றும் சோறு வழங்குபவர் குறைந்தபட்சம் மூவர் வீதம் இருத்தல் வேண்டும். விஹாரைக்கு சொந்தமான எதுவும் கடனுக்கு கொடுக் கூடாது. கிராமவாசிகள் விற்பனை செய்தாலும் விலைக்கு வாங்கக் கூடாது.’’

(கல்வெட்டுக்கள் ஆவணக்கோவை : தொகுதி 1, தொன் மர்தினுத சில்வா விக்கிரம தொகுப்பு – 1904 – 1912, தொல்பொருளியல் திணைக்களம்)

**(ஆ) தற்கால இலங்கையின் கணக்காய்வு**

கி.பி 1799 தொடக்கம் இது வரையிலான காலம் தற்கால இலங்கையின் கணக்காய்வு காலத்திற்கு உட்படும். அக்காலத்தில் லங்கா என அழைக்கப்பட்ட இலங்கையின் தற்கால கணக்காய்வுத் திணைக்களத்தின் ஆரம்பம் பிரித்தானிய யுகத்தின் முற்காலம் வரை செல்கிறது. பிரித்தானியர்களால் 1796 ஆம் ஆண்டில் இலங்கையில் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு 03 வருடங்கள் கடந்த பின்னர் அதாவது 1799 ஆம் ஆண்டில் சிசில் சுமித் எனும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியொருவர் (Auditor General) இருந்ததாக ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. அவர் 1799 சனவரி மாதம் 24 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவரின் பதவிப்பெயர் கணக்குகள் நாயகம் மற்றும் கணக்காய்வு நாயகம் (Accountant General and Auditor General ) ஆகும். அப்போது இலங்கையில் இருந்த ஸ்ரீமத்

பெட்ரிக் நோர்த் ஆளுநரினால் 1798 ஒக்தோபர் மாதம் 27 ஆம் திகதி எழுதப்பட்ட கடிதத்தின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அதில் சிசில் சுமித் அவர்களின் இந்நாட்டிற்கான வருகை, அவர் கணக்குகள் நாயகம் மற்றும் கணக்காய்வு நாயகமாக கடமையாற்றுவதற்கு அலுவலகம் ஒன்றை தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை மற்றும் அவரின் சம்பளம் பற்றிய விபரங்கள் என்பன உள்ளடங்கியுள்ளன.

"The presidency of Fort St. George has, on my application, sent Mr. Cecil Smith to arrange my office of audit and accounts, to the exertions of that gentleman through but lately arrived is owing whatever degrees of regularity now exist in this Government and which I trust will shortly be brought to a more perfect and unchangeable form. Considered as I am of the obligations which this Government has to the great advantages which it may expect from his stay, I could wish to increase his salary to Five Hundred Pagodas per mensum, which is by no means a lavish remuneration for the exercise of the two most laborious and disagreeable offices under Government. I have given him for the present, as Deputy Lieutenant Young of the Honorable Company's service who is master of the troops in the Island for the execution of which duty I have made."

திரு.சிசில் சுமித் அவர்கள் இந்த நாட்டின் முதலாவது கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக வரலாற்றில் இடம்பிடிக்கின்றார். அவரின் பின்னர் கீழ்க் காணும் உத்தியோகத்தர்கள் எக்கவுன்டன் ஜனரால் மற்றும் ஒடிடர் ஜனரால் பதவிகளை வகித்துள்ளனர்.

| தொடரொழுங்கு | பெயர் | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 02 | திரு.தோமஸ் பிரேஷர் | 1799 செப்டம்பர் மாதம் |
| 03 | திரு.ரொபட் பொய்ட் | 1802 செப்தெம்பர் 29 |

ஆனால் அவர்களின் கடமைப் பணிகளின் தன்மை பற்றிய உறுதியான தகவல்கள் எதுவுமில்லை. அவர்களின் பதவிப்பெயரின் பிரகாரம் அவர்கள் பிரதானமாக இரண்டு பணிகளை நிறைவேற்றியுள்ளனர் என ஊகிக்க முடியும். அதாவது கணக்காளராக பொது திறைசேரியின் கணக்குகள் தொடர்பான விடயங்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக அரசாங்க கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான விடயங்கள். இதற்குள் திறைசேரியின் கணக்குகள் பற்றிய கணக்காய்வுகளும் உள்ளடங்கியிருக்கலாம். தற்காலத்தின் நிலைமைக்கமைய இவ்வாறான வழிமுறைகள் சுயாதீன மற்றும் ஆக்கபூர்வமான கணக்காய்வுக்கு சாதகமாக இருக்காது என்றாலும் கூட காலனித்துவ நிர்வாக காலத்தில் இது பிரச்சினையாக அமையவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் தலைவரிடம் இருந்து கணக்கு விடயங்கள் அகற்றப்பட்ட பின்னர் 1806 இல் தலைமை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான அலுவலகம் ஒன்று தனியாக அமைக்கப்பட்டுள்ளது. அங்கு அந்தப் பதவியில் முக்கிய மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் அவரின் பதவிப் பெயர் சிவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியென (Civil Auditor General) மாற்றப்பட்டுள்ளது. அதன் பின்னர் கீழ்க் காணும் உத்தியோகத்தர்கள் சிவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளை வகித்துள்ளனர்.

| தொடரொழுங்கு | பெயர் | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 04 | திரு.சமுவெல் டொல்பிரி | 1806 ஒக்தோபர் 01 |
| 05 | திரு. பத்மத் ஆர் பிளாஸ்கட் | 1806 யூன் 14 |
| 06 | திரு. ஏ. பர்ரொலாவி | 1811 சனவரி 30 |
| 07 | திரு. ஜோன் டொயிலி | 1814 செப்தெம்பர் 01 |
| 08 | திரு. ஈ. ரொல்பிரி | 1816 |
| 09 | திரு. ஜே. டபிள்யூ. கெரின்டன் | 1817 திசெம்பர் 01 |
| 10 | திரு. எச். ஏ. மார்ஷல் | 1823 |

1815 இல் சிவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மேலதிகமாக இராணுவ கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவரும் (Military Auditor General) கடமையாற்றியுள்ளார். அதே வருடத்தில் இராணுவ கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக கடமையாற்றியவர் லுத்தினன் ரீ.டபிள்யூ. த்ரோன் அவர்களாகும். சிவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கீழ் மூன்று இலிகிதர்களும், இராணுவ கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கீழ் ஆறு இலிகிதர்களும் அக்காலத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளனர். 1816 இல் திரு. ஈ. டொல்பிரி அவர்கள் சிவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவி, இராணுவ கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவி ஆகிய இரண்டு பதவிகளையும் வகித்துள்ளார் என்பதுடன் சிவில் ஆளணியில் இலிகிதர்கள் மூன்று பேர்களும், இராணுவ ஆளணியில் இலிகிதர்கள் ஆறு பேர்களும் மொழி பெயர்ப்பாளர் ஒருவரும் உள்ளடங்கியிருந்தனர்.

அதற்கு பின்னர் பிரித்தானியர்களினால் கணக்காய்வு பணிகளின் நோக்கெல்லை விரிவாக்கம் செய்வதற்கு தீர்மானிக்கப்படும் வரை இவ்வாறான நிலைமை காணப்பட்டது, பின்னர் 1841 இல் இது திறைசேரியின் ஒரு பகுதியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்குகள் தலைமை அதிபதி மற்றும் அரசாங்க வருமான கட்டுப்பாட்டாளர் (Auditor General Accountant General and Controller of Revenue) ஆகிய அரசாங்கத்தின் முக்கிய மூன்று பதவிகளுடன் அப்போதைய அரசாங்கத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் கணக்காய்வு அலுவலகம் தாபிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பின்வரும் உத்தியோகத்தர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்குகள் தலைமை அதிபதி மற்றும் அரசாங்க வருமான கட்டுப்பாட்டாளர் பதவிகளை வகித்துள்ளனர்.

| தொடரொழுங்கு | பெயர் | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 11 | திரு. எச். ரைட் | 1841 பெப்ரவரி 01 |
| 12 | திரு. சால்ஸ் ஜே.மெகார்த்தி | 1847 மே 28 |
| 13 | திரு. டபிள்யூ. சீ. கிப்சன் | 1851 ஒக்தோபர் 01 |
| 14 | திரு. ஆர். ரீ. பெனிப்தர் | 1861 யூன் 24 |
| 15 | திரு. ஆர். ஜே. கெலண்டர் | 1866 சனவரி 02 |
| 16 | திரு. ஜோன் டக்லஸ் (சீ.எம்.ஜீ) | 1870 மார்ச் 10 |
| 17 | திரு. சி. ஏ. டி. பாக்குலே | 1876 யூன் 16 |
| 18 | திரு. டபிள்யு. எச். ரேவன்ஸ்கிரோப்ட் (சி.எம்.ஜீ) | 1877 மே 23 |
| 19 | திரு. ஜீ.ரீ.எம். ஒப்ரியன் (சி.எம்.ஜீ) | 1890 ஒக்தோபர் 18 |
| 20 | திரு. ஜே.ஏ. ஸ்வெட்ன்ஹம் (சி.எம்.ஜி) | 1891 யூலை 31 |
| 21 | திரு. டபிள்யூ. ரீ.டேலர் (சி.எம்.ஜீ) | 1985 யூன் 10 |
| 22 | திரு. எப். ஆர். எலிஸ் (சி.எம்.ஜீ) | 1902 மார்ச் 01 |

அரச வருமான கட்டுப்பாட்டாளராக அவரினால் வகிக்கப்பட்ட உயர் நிறைவேற்று அந்தஸ்த்து காரணமாக பிரித்தானிய ஆளுநர்களினால் கட்டுப்படுத்தப்பட்டது. இந்நாட்டு அரசாங்கத்தின் நிறைவேற்று செயற்குழுவின் ஆசனமொன்றும் அவருக்கு உரித்தாக காணப்பட்டது. இந்த வழிமுறையின் காரணமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அந்தஸ்த்து உயர்ந்த நிலைக்கு வருவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தாலும் அதன் ஊடாக தற்கால நிலைமையின்படி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இருக்க வேண்டிய சுயாதீனத் தன்மை இல்லாது போயிருந்தது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கணக்காய்வு அலுவலகம் 66 வருடகாலம் செயற்பட்டதுடன் 1907 இல் கணக்காய்வு அலுவலகம் மிகவும் பயனுள்ள வகையில் திறைசேரித் திணைக்களத்திலிருந்து வேறுபடுத்தப்பட்டது. இந்த தூரநோக்குடனான தீர்மானம் அப்போது பதில் கடமையில் ஈடுபட்டிருந்த ஆட்சிக்குப் பொறுப்பான செயலாளரினால் கீழ்க் கண்டவாறு பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

“1907 மார்ச் மாதம் தொடக்கம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்குகள் தலைமை அதிபதி மற்றும் அரச வருமானக் கட்டுப்பாட்டாளர் எனும் அலுவலகங்கள் ஒரு உத்தியோகத்தர்களின் கீழ் நிருவகிக்கப்படக் கூடாது என்பதுடன் இதன் பின்னர் கீழ்க் காணும் வகையில் தனித்தனியான இரண்டு உத்தியோகத்தரினால்

நிருவகிக்கப்பட வேண்டுமென காலனித்துவ ஆட்சிக்கு பொறுப்பான அரச செயலாளரின் அங்கீகாரத்திற்கமைய அதிமேதகு ஆளுனரினால் கட்டளையிடப்பட விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ) அரச வருமான கட்டுப்பாட்டாளர்

(ஆ) காலனித்துவ கணக்காய்வாளர்

கணக்காளரின் பணிகள் பொது திறைசேரியினால் நிறைவேற்றப்படும். கணக்காய்வு அலுவலகத்தின் தலைவரின் பதவிப்பெயர் ‘‘காலனித்துவ கணக்காய்வாளர் (Colonial Auditor) என மாற்றப்பட்டது.

(கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் - அரச கணக்காய்வு - துண்டுபிரசுரம்)

இந்த கால கட்டத்தினுள் பின்வரும் உத்தியோகத்தர்கள் காலனித்துவ கணக்காய்வாளர் பதவிகளை வகித்துள்ளார்கள்.

| தொடரொழுங்கு | பெயர் | நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 23 | திரு. பர்னார்ட் சீனியர் (ஐ.எஸ்.ஓ) | 1907 மார்ச் 01 |
| 24 | திரு. டி எஸ் மெக். கிரேக்கர் | 1909 ஏப்ரல் 08 |
| 25 | அதிமேதகு டபிள்யூ. டபிள்யூ. வூட்ஸ் சி. எம். ஜி | 1914 மே 27 |
| 26 | திரு. எவ். ஜி. மோலி | 1922 மார்ச் 01 |
| 27 | திரு. ஒ. ஈ. குணதிலக்க | 1931 யூன் 25 |

இக் காலகட்டத்தில் இத்திணைக்களம் அரசாங்கத்தின் தனியான திணைக்களமாக இயங்கியது.

டொனமூர் யாப்பு செயற்படுத்தப்பட்டவுடன் 1931 ஆம் ஆண்டில் இந்த திணைக்களத்தின் தலைவரின் பதவிப் பெயர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி என மாற்றப்பட்டது. (Auditor General). இப்பதவி இன்று வரை நடைமுறையிலுள்ளது. அக்காலம் வரை (1931) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் தலைவராக பிரித்தானியாவைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தர் பதவி வகித்தார். டொனமூர் யாப்பின் கீழ் முதலாவது கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக திரு.ஒ.ஈ. குணதிலக்க அவர்கள் பதவி வகித்தார். (பின்னர் ஸ்ரீமத் ஒலிவர் குணதிலக்க அவர்கள்). இந்தப் பதவியை வகித்த முதலாவது இலங்கையர் இவராவார். 1948 இல் பிரித்தானியாவிடம் பெற்ற பின்னர் முதலாவது பிரதம ஆளுநராக இவர் நியமிக்கப்பட்டார்.

கணக்காளர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் காலனித்துவ கணக்காய்வாளர் என பல பெயர்களால் அழைக்கப்பட்ட இந்த உத்தியோகத்தர்கள், பிரித்தானிய அரசுக்காக இந்த நாட்டின் நிருவாகிகளுக்கு பொறுப்புக்கூறினார்கள். எவ்வாறாயினும், 1931 இல் டொனமூர் அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டவுடன் கணக்காய்வாாளர் தலைமை அதிபதி பிரித்தானிய அரசுக்கு பொறுப்புக்கூறுவதற்கு பதிலாக முதல் தடவையாக இந்நாட்டு அரசியலமைப்புக்கு பொறுப்புக்கூறினார். அதன் பின்னர் பின்வரும் உத்தியோகத்தர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளை வகித்துள்ளனர்.

| தொடரொழுங்கு | பெயர் | நியமன திகதி |
|---|---|---|
| 28 | திரு.ஈ.எலன் சுமித் (சீ.பீ.ஈ) | 1946 பெப்ரவரி 16 |
| 29 | திரு. எல்.ஏ. வீரசிங்ஹ | 1953 மார்ச் 02 |
| 30 | திரு. டீ. எஸ்.த சில்வா | 1963 செப்தெம்பர் 14 |
| 31 | திரு. பி. எல். டபிள்யூ. பர்னாந்து | 1964 பெப்ரவரி 21 |
| 32 | திரு. டீ. ஆர். செட்டினாயக்க | 1969 ஆகஸ்ட் 15 |
| 33 | திரு. பீ. எம். டபிள்யூ. விஜயசூரிய | 1971 நவம்பர் 10 |

1931 இல் டொனமூர் அரசியலமைப்பின் ஊடாக கணக்காய்வுப் பணிகள் ஓரளவு தெளிவுபடுத்தப்பட்டிருந்த போதிலும், 1947 இன் டொனமூர் அரசியலமைப்புக்கு பின்னர் அமுல்படுத்தப்பட்ட அரசியலமைப்பின் ஊடாக கணக்காய்வுப் பணிகள் மற்றும் அதிகாரங்கள் சாதாரணமான வகையில் மீண்டும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த அரசியலமைப்பு இரண்டினாலும் அரசாங்க திணைக்களங்களின் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுவதற்கு ஒழுங்கு விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி அதிகார சபைகள், அரச கூட்டுத்தாபனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்ய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒழுங்கு விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. 1972 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பின் கீழ் இலங்கை, இலங்கை குடியரசு என பிரகடனப்படுத்தப்பட்டவுடன் உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் அந்த நிறுவனங்களின் கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்ட ஒழுங்கு விதிமுறைகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுகின்றது.

1978 செப்தெம்பர் 07 திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னரும் திரு.பீ.எம்.டபிள்யூ. விஜயசூரிய அவர்களின் பதவிக்காலத்தின் பின்னரும் இது வரை (2016) பின்வரும் உத்தியோகத்தர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகள் வகித்துள்ளனர்.

| ஒழுங்குமுறை | பெயர் | நியமன திகதி |
|---|---|---|
| 34 | திரு.டபிள்யூ. காமினி ஏபா | 1983 மே 02 |
| 35 | திரு.எஸ்.எம். சப்ரி | 1993 சனவரி 26 |
| 36 | திரு. எஸ். சி மாயாதுன்னே | 2000 ஆகஸ்ட் 13 |
| 37 | திரு. பீ.ஏ. பிரேமதிலக்க | 2006 ஒக்தோபர் 23 |
| 38 | திரு. எஸ். சுவர்ணஜோதி | 2008 சனவரி 03 |
| 39 | திரு. எச்.ஏ.எஸ். சமரவீர | 2011 ஆகஸ்ட் 15 |
| 40 | திரு.ஏச்.எம்.காமினி விஜேசிங்ஹ | 2015 நவம்பர் 17 முதல் இதுவரை |

## திணைக்களத்தின் பெயர்

1960 ஆம் தசாப்தம் வரை திணைக்களம் பல்வேறு ஆங்கிலப் பெயர்களில் அழைக்கப்பட்டிருந்தது. பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த தகவல்களின் படி 1930 ஆம் தசாப்தம் முதல் கீழே குறிப்பிடப்பட்ட பெயர்களில் திணைக்களம் அழைக்கப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் | 1930 ஆம் தசாப்தம் |
| கணக்காய்வுத் திணைக்களம் | 1940 ஆம் தசாப்தம் |
| கணக்காய்வு அலுவலகம் | 1950 ஆம் மற்றும் 1960 ஆம் தசாப்தங்கள் |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் | 1971 இன் பின்னர் |

1960 ஆம் தசாப்த காலத்தில் ‘‘கணக்குப் பரிசோதனை அலுவலகம்’’ என்ற சிங்களப் பெயரில் அழைக்கப்பட்ட இத்திணைக்களம் 1971 ஆம் ஆண்டில் ‘‘கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்’’ என மாற்றப்பட்டிருந்தது.